செ.வெ.எண்: நாள்:23.10.2021

# நாமக்கல் மாவட்டம்

## நாமக்கல் மாவட்டத்தில் 6ம் கட்டமாக நடைபெற்ற கொரோனா சிறப்பு தடுப்பூசி முகாம்களை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 12.09.2021, 19.09.2021, 26.09.2021, 03.10.2021 மற்றும் 10.10.2021-ல் அன்று மாபெரும் தடுப்பூசி முகாம் நடைபெற்றதில் 85,325, 31,448, 59,753, 31,956 மற்றும் 50,568 பேர் தடுப்பூசி செலுத்தி பயன்பெற்றனர். அதேபோல் இன்று **23.10.2021 6ம் கட்டமாக அனைத்து ஊராட்சிகள்,** பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், ஊட்டச்சத்து மையங்கள் மற்றும் அரசு தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் உள்ள 673 நிலையான முகாம்கள் மூலமாகவும் 77 நடமாடும் குழுக்கள் மூலமாகம் ஆக மொத்தம் 750 எண்ணிக்கையில் கொரோனாநோயத்தொற்று தடுப்பு **மெகா தடுப்பூசி முகாம்**கள் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெற்றன.

இம்முகாம் பணிகளில் 210 மருத்துவர்கள், 430 செவிலியர்கள், 1,600 அங்கன்வாடி பணியாளர்கள், 1,400 தன்னார்வலர்கள், 415 பயிற்சி செவிலியர்கள் மற்றும் 265 பயிற்சி சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 1400 ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேலும் இந்த மெகா தடுப்பூசி முகாமில் பொதுமக்கள் கலந்து கொள்வதற்காக தொலைக்காட்சிகள், பத்திரிக்கைகள், சமூக வலைதளங்கள் மூலமாக முதியோர்கள், இளைஞர்கள், வணிகர்கள் தடுப்பூசி போடுவதன் அவசியத்தை உணர்த்தும் குறும்படங்கள், செய்திகள் வெளியிடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்க தனியார் தொண்டு நிறுவனங்கள், வணிகர்கள், லாரி உரிமையாளர்கள், கோழிப்பண்ணை உரிமையாளர்கள், நகைக்கடை உரிமையாளர்கள் தங்கள் பகுதிகளில் தடுப்பூசி போட்டுக்கொள்ள பொதுமக்களுக்கு தங்கக்காசு, வெள்ளிக்காசு, பாத்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை குலுக்கல் முறையில் பரிசாக வழங்க உரிய ஏற்பாடுகளை செய்திருந்தார்கள்.

நாமக்கல் நகராட்சி உழவர் சந்தை அருகில் செயல்பட்டுவரும் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, மோகனூர் சாலையில் உள்ள ஐயப்பன் கோயில் ஆகிய இடங்களில் தடுப்பூசி முகாம்களில் பொதுமக்கள் ஆர்வத்துடன் வருகை தந்து தடுப்பூசி போட்டுக்கொள்வதை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி அவர்கள், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு.கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அவர்கள் ஆகியோர் இன்று (23.10.2021) நேரில் சென்று பார்வையிட்டார்கள்.

இந்த நிகழ்வுகளின் போது செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன், நாமக்கல் மாவட்ட சுகாதார பயிற்சிக்குழு மருத்துவ அலுவலர் மரு.ரமேஷ், நாமக்கல் வட்டாட்சியர் திரு.திருமுருகன், நாமக்கல் நகராட்சி ஆணையாளர் திரு.பு.பொன்னம்பலம், உட்பட சுகாதார மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள், செவிலியர்கள், தொண்டு நிறுவனத்தினர், தன்னார்வலர்கள், அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**